தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 16, திருவள்ளுவர் ஆண்டு–2053

2022 ஏப்ரல் 29, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்."

நோயாளியின் வயது, நோயின் தன்மை, மருத்துவம் செய்வதற்குரிய நேரம் என்பனவற்றை எல்லாம் மருத்துவம் கற்றவர் எண்ணிப் பார்த்தே செயல்பட வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

201—

பாதாள சாக்கடைத் திட்டம்

***5636—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்குப் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியுடன் 2011 ஆம் ஆண்டு முதல் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான 1–வது வார்டு, 2–வது வார்டு, 3–வது வார்டு, 41–வது வார்டு மற்றும் 42–வது வார்டு ஆகிய வார்டுகளுக்கும் மற்றும் முந்தைய திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டப் பணி 103 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ள, விரிவான திட்ட மதிப்பீடு ரூ.131.90 கோடியில் தயார் செய்யப்பட்டுள்ளது. விரைவிலே பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சின்னவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிப் பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று 2006 முதல் 2011 வரையிலான நமது கழக ஆட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டது. அன்றைய துணை முதல்வராக இருந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதுக்கோட்டை கம்பன் நகர் பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் கடந்த ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு, மிகவும் காலதாமதமாகத் தரமற்ற வகையில் முடிக்கப்பட்டு, பல பகுதிகளில் நிறைவு பெறாமல், கழிவுநீர்க் கசிவு ஏற்பட்டு மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். பின்னர் நமது கழக ஆட்சி அமைந்தவுடன் குறைகள் சரிசெய்யப்பட்டன. தற்போது புதுக்கோட்டை நகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வருவதற்கு வழிவகை செய்ய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 103 கிலோ மீட்டர் தூரத்திற்கு விடுபட்ட பகுதிகளிலும், புதுக்கோட்டை நகராட்சியோடு புதிதாக இணைத்திருக்கிற பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் போடவேண்டுமென்று திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் நிதியைப் பெற்று புதுக்கோட்டை நகரம் முழுமைக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புதுக்கோட்டை தொகுதி மக்களின் பல்வேறு கோரிக்கைகளை ஏற்று உடனுக்குடன் திட்டங்களை நிறைவேற்றித் தரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடவள்ளி வீரகேரளம் பகுதி பாதாள சாக்கடைத் திட்டப் பணி இந்த ஆண்டே எடுத்துக் கொள்ளப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே பாதாள சாக்கடைத் திட்டப் பணி எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்ல முடியாது. பணி எடுத்துக்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை எடுக்க வேண்டுமென்று சொன்னால், முன்னாள் அமைச்சர் உங்களுடனே இருப்பவர், அவருக்கே தெரியும். பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை எடுக்க வேண்டுமென்றால் அரசாங்கத்தில்*

சில நடைமுறைகள் இருக்கின்றன. அந்த நடைமுறைகளின்படி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அதற்கென்று நிதி ஒதுக்கப்பட்டு அந்தப் பணி விரைவில் எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது காரைக்குடி தொகுதிக்குட்பட்ட காரைக்குடியில் ஒருங்கிணைந்த பத்திரப் பதிவு அலுவலகத்தை காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனது பொற்கரங்களால் திறந்து வைத்தமைக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று நேற்றையதினம் சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியில் வேளாண் கல்லூரியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முன்னாள் மத்திய நிதியமைச்சர் அவர்கள் சார்பாகவும், பாராளுமன்ற உறுப்பினர் சார்பாகவும், எனது சார்பாகவும் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது காரைக்குடி தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முழுமையாக முடிக்கப்படாமல் 6 ஆண்டுகளாகத் தொடர்ந்து இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளை விரைந்து முடித்துத் தர வேண்டுமென்றும், விடுபட்ட பகுதிகளுக்குப் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தேவகோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 29]

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில் முழுமையாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தின்போது ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை சொல்கிறேன்.

தமிழக அரசின் கொள்கை முடிவின்படி, ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தை நகரம் முழுவதிற்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில், திருப்பூர், வேலூர், திண்டுக்கல், நாகர்கோவில், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் ஆவடி ஆகிய மாநகராட்சிகளிலும், காரைக்குடி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை, நாமக்கல், தேனி அல்லிநகரம், மயிலாடுதுறை, திருவாரூர், பழனி, திருவேற்காடு, மாங்காடு மற்றும் பூந்தமல்லி ஆகிய நகராட்சிகளிலும் விடுபட்ட இடங்களில், புதிதாகச் சேர்க்கப்பட்ட இடங்களிலும் 100 சதவிகிதம் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த முறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட்டு, முழுமையாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆகியும், தற்போது வரை பணிகள் நடைபெறவில்லை. சென்னைக்கு அடுத்தபடியாக செங்கல்பட்டு வளர்ந்து வரும் பகுதியாக இருப்பதாலும், நாளுக்குநாள் மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே செல்வதாலும், மிகுந்த இடர்ப்பாடுகள் உள்ளதாலும், பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பாக இரண்டு நாட்களுக்கு முன்பு, செங்கல்பட்டில் குடிதண்ணீர் மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது, அதைச் சரி செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதேபோன்று, குப்பைகள் கொட்டப்படுகின்ற இடத்தைச் சீர் செய்ய வேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். இப்பொழுது, பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ள நகராட்சிகளோடு, செங்கல்பட்டு நகராட்சியையும் இணைத்து, செங்கல்பட்டு நகராட்சியில் முழுமையாக 100 சதவிகிதம் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட, மதுராந்தகம் நகராட்சியில் முறையான பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. குறிப்பாக, வார்டு எண் 1 மற்றும் வார்டு எண் 11 மோச்சேரி பகுதியில் மழைக் காலங்களில், மழை நீரும், சாக்கடை நீரும் செல்வதற்கு வழி இல்லாமல், குடியிருப்புகளின் முன்பே தேங்கி நிற்கின்றன. கடந்த மழைக் காலத்தில், நான் நகராட்சி நிருவாகத்தினரையும் நேரில் அழைத்துச் சென்று, உடனடியாக இப்பணியை மேற்கொள்ள நகராட்சி நிருவாகத்தினரிடம் அறிவுறுத்தினேன். ஆனால், அவர்கள் பணியை மேற்கொள்ள தாமதமாக்கினார்கள். இதனால், என்னுடைய சொந்தச் செலவில், அந்தக் கழிவுநீரை மோட்டார்மூலம் அகற்றினேன். இங்கு கழிவுநீர் தேங்குவதால், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, உடனடியாக இப்பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

2022 ஏப்ரல் 29]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்களுடைய பகுதிகளில் இதுபோன்று பல இடங்களில் சாக்கடை நீரும், தண்ணீரும் ஒன்றாக கலந்து செல்வதால், நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இதை ஆய்வு செய்து, 138 நகராட்சிகளிலும் எந்தெந்தப் பகுதிகளில் 100 சதவிகிதம் பணிகள் நடைபெற்றிருக்கின்றன; ஏற்கெனவே தொடங்கப்பட்ட இடங்களில், எங்கு முடிவு பெறாமல் இருக்கின்றன என்பதை கணக்கீடு செய்ய துறைக்கு உத்தரவு தரப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில்கொண்டு, விரைவில் அதைச் சீர் செய்வதற்குரிய முழு நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

கலைக் கல்லூரி

***18402—திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல்

TRUTH ALONE TRIUMPHS